**<u>சார்பு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>**

**OS .No. 184/2020**

இன்று 2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 22 ஆம் நாள் இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.M.தனபால்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

**பெயர் : ஆதம்ஷா (Dw2)** **வயது :53**

**த/பெ. – : சின்னப்ப ராவுத்தர்** **முகவரி : உடுமலைப்பேட்டை**

**தொழில் : நிலவணிகம்**

<u>நாள் 22.06.2026</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டு அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் பஞ்சாயத்து ஒப்பந்த கிரைய ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அல்ல.

**(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்/–மு.தனபால்
சார்பு நீதிபதி,
உடுமலைப்பேட்டை